# கீழக்கரை நகர்மன்ற 08.03.2019–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

## பொருள் :1

### 2019–ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12–ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)–ல் பிரிவு 2.5 மற்றும் 25–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306–ன்படி 2019–ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12–ன் கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்

1. அதிகார அமைப்பு

| | | |
|---|---|---|
| (i) | **செயலாக்க அதிகாரி** | நகராட்சி பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவார். |
| (ii) | **ஆய்வு நடத்தும் அதிகாரி** | ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சி பகுதிகளில் துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர். |
| (iii) | **மேல்முறையீட்டு அலுவலர்** | இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார். |
| (iv) | **தண்டனைகள் விதிக்கும் முறைகள்** | ஷை சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கமான தொழில் களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன நிறுவனங்களின் முறைகள். |

2. **வர்த்தக நிறுவனங்கள் வகைப்பாடு :**
   **மொத்த சேமிப்பாளர் / விநியோகிப்பாளர்**
   a. 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   b. 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   c. 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   d. 1501 ச.அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   e. 2000–ம் அதற்கு மேல்
3. **வணிக வளாகங்கள்**
   a. பெரிய மற்றும் சிறிய துணிக்கடைகள்.
   b. பல்பொருள் அங்காடிகள் பெரியது.
   c. திரையரங்குகள்.
   d. அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனை கூடங்கள் (BARS) மனமகிழ்மன்றம் முதலான இதர இனங்கள்.
   e. கல்வி நிறுவன வளாகங்கள்.
   f. அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள்.
   g. திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள், உணவகங்கள் முதலானவை
   h. பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்
4. மளிகை கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள், பழச்சாறு விற்பனைக்கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,
5. சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைகாரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்

6. இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம் இந்த துணை விதிகள் தொடஙகிய நாளும் அதற்கும் பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.
7. துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர் அட்டவணை II–ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப்பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சி சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.
8. மேல் முறையீட்டுக்கு உரிமை கீழக்கரை நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் கீழக்கரை நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

**II தண்டனைகள் விபரம்**

பிரிவு 306 (28–A) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டஙகள்

| குற்றஙகள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|
| பயன்படுத்தகூடிய மற்றும் தூக்கிவீசப்பட கூடிய நெகிழியை சேமித்தல் வழஙகுதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.3000 மூவாயிரம் ரூபாய் | ரூ.6000 ஆறாயிரம் ரூபாய் | ரூ.10,000 பத்தாயிரம் ரூபாய் |
| வணிக வளாகஙகள் துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அஙகாடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனஙகளில் பயன்படுத்தக்கூடிய மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.1000 ஆயிரம் ரூபாய் | ரூ.2500 இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் | ரூ.5,000 ஐந்தாயிரம் ரூபாய் |
| மளிகைக்கடைகள், உணவகஙகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனஙகளில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கிவீசப்படகூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.500 ஐநூறு ரூபாய் | ரூ.1000 ஆயிரம் ரூபாய் | ரூ.2500 இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் |
| சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்படகூடிய மற்றும் தூக்கிவீசப்படகூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.100 ஒருநூறு ரூபாய் | ரூ.200 இருநூறு ரூபாய் | ரூ.500 ஐந்துநூறு ரூபாய் |

**ந.க.எண். 250 /2017/எச்1**

**<u>தீர்மானம் எண். 542 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :2</u>**

கீழக்கரை நகராட்சி அலுவலக பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு, பணியாளர்களுக்கான எழுதுபொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், அச்சிடும் தாள்கள் 2019–2020 ஆம் ஆண்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். 510/சி2/2017)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலகப்பணிகளின் அவசர அவசியத்தின் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் பொருட்கள் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண். 543அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :3</u>**

கீழக்கரை நகராட்சி அலுவலக பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு பணிகளுக்கு தேவையான கணினி தொடர்பான டோனர்கள், கீபோர்டுகள், மவுஸ்கள் இதர சாமான்கள் 2019–2020 ஆம் ஆண்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.510/சி2/2017)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலகப்பணிகளின் அவசர அவசியத்தின் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் பொருட்கள் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண். 544அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :4</u>**

இந்நகராட்சியில் 2018–19–ம் ஆண்டு நடைபெற்ற திட்டப்பணிகள் மற்றும் இதரப்பணிகளில் ஒப்பந்ததாரர்கள். சப்ளைதாரர், இதர நிறுவனங்கள் மற்றும் இந்நகராட்சி பணியாளர்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி பிடித்தங்களை அரசு தலைப்பில் செலுத்தப்பட்டதற்கு கீழ்காணும் விபரப்படியான பணிகள் செய்து கொடுத்த வகைக்கு கட்டணம் ரூ 24600/– மட்டும் வழஙகஙகோரி M/S ஆலயம் அசோஸியேட்ஸ் எண்.117 ஜெய் துர்கா காம்ளக்ஸ் சத்திரம் பஸ்நிலையம் திருச்சி–2 நிறுவனத்திடமிருந்து18.01.2019 மற்றும் 28.02.2019–ந் தேதிகளில் பட்டியல்கள் பெறப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| 1 | TDS Number Generation and Data Processing & Uploading Charges | Rs.4600/- |
| 2 | GST Return Filing the Period from Oct 2018 to Dec 2018 | Rs.5350/- |
| 3 | GST Return Generation and Data Processing & Uploading Charges | Rs.13500/- |
| 4 | GST Certificate Downloading Charges | Rs.1150/- |
| | **மொத்தம்** | **Rs.24600/-** |

மேற்கண்ட விபரப்படி ரூ.9950+ரூ.14650= ரூ.24,600/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். 969/2018/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

இந்நகராட்சி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு ரூ 24,600/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண். 545அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :5</u>**

இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 8th SHPC 2018-19-ம் ஆண்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.86.40 இலட்சம் (23.40+63.00) மதிப்பீட்டில் சிப்பம் 1 மற்றும் சிப்பம் 2 (Package I&II)-ல் கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.1191/பி3/2019 நாள்.21.01.2019-ந் தேதிய நிர்வாக அனுமதி மற்றும் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.18281/2018/DO1 நாள்.30.01.2019-ந் தேதிய தொழில்நுட்ப அனுமதியும் வழஙகப்பட்டுள்ளது.

மேற்காணும், திட்டப்பணிகளில் சிப்பம்-2 (Package-II) கண்டுள்ள இந்நகராட்சி பழைய மற்றும் புதிய உரக்கிடஙகில் 9350 Cum ஏற்கனவே உள்ள குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றுதல். (Bio Mining Process) ரூ. 63.00 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளுக்கு 26.02.2019 -ம் தேதிய மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு சென்னை, அகார்ட் அட்வர்டைசிங் மூலம் 06.02.2019-ம் தேதி ஒரு தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் ஒரு ஆஙகில தினசரி நாளிதழில் மாநில அளவில் அனைத்து பதிப்புகளிலும் ( All Edition in the State) பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ65,573/-க்கு பட்டியல் எண்.AAA/1208/18-19 நாள்.10.02.2019-ன்படியானது இந்நகராட்சிக்கு 01.03.2019-ந் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்காணும் பட்டியல் ரூ.65,573/-மட்டும் சென்னை, அகார்ட் அட்வர்டைசிங ஏஜென்ஸிக்கு வழஙகுவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 1224/2018/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

சென்னை, அகார்ட் அட்வர்டைசிங ஏஜென்ஸி விளம்பர கட்டணம்ரூ65,573/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழஙக மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 546அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :6**

தமிழ்நாடு ஒருஙகிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்ட விதிகள் 2019—ன் விதி 14—ல் திட்ட அனுமதி அல்லது கட்டிட அனுமதி 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழஙக வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே முதலில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரிய விண்ணப்பதாரர்களுக்கு கட்டிட அனுமதி கட்டணம் மற்றும் திட்ட அனுமதி கட்டணம் ஆகியவற்றினை ஏற்கனவே வசூலிக்கும் தொகையிலிருந்து கூடுதலாக 15 சதவீதம் வசூலிக்கவும் , மேலும் ஒரு முறை காலநீட்டிப்பு 3 ஆண்டுகள் வழஙக விண்ணப்பிக்கும் நபர்களுக்கு நடப்பில் முதலில் செலுத்திய கட்டண விகிதம் முழுவதும் செலுத்தப்பட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

தற்போது கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி காலம் மூன்று ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தி உள்ளதால் முதலில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரிய விண்ணப்பதாரர்களுக்கு ஏற்கனவே வசூலிக்கும் தொகையில் 15 சதவீதம் கூடுதலாக வசூல் செய்யவுவம்,மேலும் ஒரு முறை கால நீட்டிப்பு 3 ஆண்டுகள் வழஙக விண்ணப்பிக்கும் நபர்களுக்கு நடப்பில் முதலில் செலுத்திய கட்டணம் விகிதம் முழுவதும் செலுத்த மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 547அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :7**

தமிழ்நாடு ஒருஙகிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்ட விதிகள் 2019—னை,அரசாணை நிலை எண்.18,நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழஙகல் துறை (MA1) நாள்.04.02.2019—ல் உத்திரவு பிறப்பிக்கப்படட்டு அதனை தமிழ்நாடு அரசிதழில், அரசிதழ் எண்.43, நாள்.04.02.2019—ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு ஒருஙகிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்—2019னை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 548அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :9

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1191/பி3/2019, நாள்.21.01.2019–ன்படி இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா இயக்கம் (Swatch Bharat Mission) திடக்கழிவு மேலாண்மை பணிகள் (Solid Waste Management Scheme) 2018–2019 ஆம் ஆண்டு 8th SHPC சிப்பம்–1 (Package-I)ல் கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள 26.02.2019–ம் தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தகாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் ஆவணத்தின்படி தொழில் நுட்ப கூறல் (Technical Bid) நிபந்தனைகளை நிறைவு செய்திருப்பதாக தொழில்நுட்ப கூராய்வு குழுவால் ஆய்வு செய்து 04.03.2019–ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் விலைக்கூறல் (Price Bid) 07.03.2019–ந் தேதி மாலை 3.30 மணியளவில் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**Package –I மதிப்பீடு ரூ.23.40 லட்சம்**

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்ததாரரின் ஒப்பந்ததொகை ரூபாய் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க மின்கலன் மூலம் இயங்கும் வாகனம் 13 எண்ணம் வாஙகுதல். (Purchase of Battery Operating Vehicle) | M/S. ஈஸ்வர் மோட்டார்ஸ்,<br>செட் நம்பர்.9, சிட்கோ இன்டஸ்ட்ரிஸ் எஸ்டேட்,<br>தெளிச்சாத்த நல்லூர் (Po),<br>பரமக்குடி–623 707 | ரூ .23,29,600/– மதிப்பீட்டு தொகையை விட 0.12% குறைவு |
| 2 | | M/S. கிரீன்டிக்ஸ் இன்டஸ்ட்ரிஸ் பி.லிட்.,<br>பிளாட் நம்பர்–D–4,<br>சிட்கோ இன்டஸ்ட்ரிஸ் எஸ்டேட்,<br>கப்பலூர்,<br>மதுரை –625 008 | ரூ .23,38,700/– மதிப்பீட்டு தொகையை விட 0.27% அதிகம் |

**[கோப்பு எண்.1224/ 2018/இ1]**

**அலுவலகக் குறிப்பு.**

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட 0.12% சதவிகிதம் குறைவாக விலைவிகிதம் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர், M/S. ஈஸ்வர் மோட்டார்ஸ், பரமக்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 550 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :10

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1191/பி3/2019, நாள்.21.01.2019–ன்படி இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா இயக்கம் (Swatch Bharat Mission) திடக்கழிவு மேலாண்மை பணிகள் (Solid Waste Management Scheme) 2018–2019 ஆம் ஆண்டு 8th SHPC சிப்பம்–2 (Package-II)ல் கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள 26.02.2019–ம் தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தகாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் ஆவணத்தின்படி தொழில் நுட்ப கூறல் (Technical Bid) நிபந்தனைகளை நிறைவு செய்திருப்பதாக தொழில்நுட்ப கூராய்வு குழுவால் ஆய்வு செய்து 04.03.2019–ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் விலைக்கூறல் (Price Bid)

07.03.2019–ந் தேதி மாலை 3.30 மணியளவில் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**Package –II மதிப்பீடு ரூ. 63.00 லட்சம்**

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் / நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பழைய மற்றும் புதிய உரக்கிடஙகில் 9350 Cu.m ஏற்கனவே உள்ள குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றுதல் (Bio mining process). | 63.00 | திரு.எஸ்.முனியசாமி, ஒப்பந்ததாரர், எண்1/4, மாரியம்மன் கோவில் தெரு, இராமநாதபுரம் | ரூ.62,64,500/– மதிப்பீட்டு தொகையைவிட 4.85%கூடுதல் |
| | | | திரு.மு.கார்த்திகேயன், ஒப்பந்ததாரர், எண்1/5, மாரியம்மன் கோவில் தெரு, இராமநாதபுரம் | ரூ. 63,20,600/– மதிப்பீட்டு தொகையைவிட 5.79%கூடுதல் |

**[கோப்பு எண்.1224/ 2018/இ1]**

**அலுவலகக் குறிப்பு.**

1. மேற்படி ஒப்பந்தகாரர்கள் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலான விலை விகிதம் கொடுத்துள்ளதை விலை குறைப்பு செய்து கொடுக்க கோரியதில், குப்பைகளை தரம் பிரிக்கும் பணிக்கு உபயோகிக்கப்படும் மெஷினரிக்கு பயன்படுத்தப்படும் எரிபொருள் விலை விகிதம் மார்க்கெட்டில் கூடுதலாகி கொண்டிருக்கும் காரணத்தாலும், குப்பைகளை தரம் பிரிப்பதற்கு பயன்படுத்தப்படும் வேலையாட்கள் கூலி உயர்வு காரணமாகவும், தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை கொண்டு சேர்ப்பதற்கான போக்குவரத்து கட்டணங்கள் அதிகமாக உள்ளதை சுட்டிக் காட்டி விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்ததின் அடிப்படையில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.85 சதவீதம் கூடுதலில் குறைவாக விலைவிகிதம் குறிப்பிட்டுள்ள,இராமநாதபுரம் ஒப்பந்ததாரர் திரு.எஸ். முனியசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
2. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி பிரிவு 2.7.2–ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5 சதவீதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 551அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :11**

**கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் 9–எண்ணம் உயர்மின் கோபுர விளக்குகள் (High Mast Light) பொறுத்தப்பட்டு இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி, உயர்மின் கோபுர விளக்குகள் எரியாத நிலையில் இருப்பதால் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் தற்போது 7–இடங்களில் உள்ள உயர்மின் கோபுர மின்விளக்குகளில் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும் மின்விளக்குகளை இறக்கி ஏற்றும் இரும்பு கயிறு (ரோப்) தன்மை இழந்துள்ளதையும், சரிசெய்து மேற்படி 7–எண்ணம் உயர்மின்**

கோபுர விளக்குகளை நல்ல முறையில் எரிய வைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.6,80,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 18.02.2019—ந்தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் உயர்மின் கோபுர மின்விளக்குகளை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 07.03.2019—ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்

| வ. எண் | திட்டம்/<br>வேலையின் விபரம் | மதிப்பீடு<br>(இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | வருவாய் நிதி 2018—19 | | |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள உயர்மின் கோபுர விளக்குகள் (High MastLight) பழுதுநீக்கம் செய்யும் பணிகள்.(1)ஏர்வாடி சந்திப்பு,(2)வள்ளல் சீதக்காதி சாலை V.A.O அலுவலகம் அருகில்,(3)தெற்குதெரு,(4)மேலத்தெரு புதுப்பள்ளி எதிரில்,(5)பழைய குப்தா பள்ளி அருகில் (6)C.S.I .சர்ச் அருகில் (7)பழைய கஸ்டம்ஸ் அலுவலகம் ஆகிய 7—இடஙகள் | 6.80 | 1)அம்பாள் எலக்ட்ரிக்கல்ஸ் 2/826—1, மருதுபாண்டியர் தெரு, மதுரை—20 | மதிப்பீட்டு தொகைக்கு 0.45% குறைவு |
| | | | 2) சிவா ஜாப் ஓர்க்ஸ், 5/558, சத்திய கோபால் தெரு, சதாசிவா நகர், மதுரை—20 | மதிப்பீட்டு தொகைக்கு 1.26% அதிகம் |

கோப்பு எண். 103/2019/ இ1

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மதிப்பீட்டு தொகையை விட 0.45% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள அம்மாள் எலக்ரீக்கல்ஸ், மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

<u>தீர்மானம் எண். 552அனுமதிக்கப்பட்டது.</u>

<u>பொருள் :12</u>

இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் அமைந்துள்ள தெருமின் விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்து நல்ல முறையில் எரிய வைப்பதற்கு தேவையான தெருமின் விளக்கு பராமரிப்பு பொருட்கள் 2019—20 ஆம் ஆண்டுக்கு விநியோகம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.8,00,000/—க்கு இந்நகர் மன்றத்தில் 27.02.2019—ந் தேதி அனுமதி பெறப்பட்டு, அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்கு தெருமின் விளக்குகள் பராமரிப்பு பொருட்கள் விநியோகம் செய்வதற்கு 08.03.2019—ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்

| வ. எண் | திட்டம்/<br>வேலையின் விபரம் | மதிப்பீடு<br>(இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2019–20** | | | | |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் உள்ள தெருமின் விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்து நல்ல முறையில் எரிய வைப்பதற்கு தேவையான தெருமின் விளக்கு உதிரி பாகஙகள் 2019–20 ஆம் ஆண்டுக்கு விநியோகம் செய்தல் | 8.00 | 1) ஜீ.வி. ஏஜென்ஸிஸ், மதுரை | மதிப்பீட்டு தொகைக்கு 0.12% குறைவு |
| | | | 2) விகாஸ் ஏஜென்ஸிஸ்,மதுரை | மதிப்பீட்டு தொகைக்கு 1.32% அதிகம் |

**கோப்பு எண். 73 /2019/ இ1**

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டு தொகையை விட 0.12% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஜீ.வி. ஏஜென்ஸிஸ், மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 553அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :13**

**கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் சேகரமாகும் குப்பைகளை பிரித்து உரமாக தயாரிக்க இந்நகராட்சி புதிய உரக்கிடங்கில் 2016–17 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 1/3 & Pre Processing Shed அமைக்கப்பட்டுள்ள தரைதளத்தில் மணல் மற்றும் கிராவல் நிரப்பும் பணி (Sand and Gravel Filling) செய்வதற்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை. ஆகவே இத்திட்டப்பணியினை விரைந்து முடிக்கும் பொருட்டு ரூ.4,20,000/–க்கு மதிப்பீடு தயார் செய்ய இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு 28.09.2018–ந்தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 1/3 & Pre Processing Shed தரைதளத்தில் மணல் மற்றும் கிராவல் நிரப்பும் பணி (Sand and Gravel Filling) செய்வதற்கு 08.03.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2018–19** | | | | |
| 1. | இந்நகராட்சி புதிய உரக்கிடங்கில் 2016–17 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் 1/3 & Pre | 4.20 | எஸ்.எம். முனியசாமி 1/4, மாரியம்மன் கோவில் தெரு, இராமநாதபுரம். | மதிப்பீட்டு தொகைக்கு 0.63% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | Processing Shed அமைக்கும் தரைதளத்தில் மணல் மற்றும் கிராவல் நிரப்பும் பணி (Sand and Gravel Filling) | | எம்.கார்த்திகேயன் 4/5, மாரியம்மன் கோவில் தெரு, இராமநாதபுரம். | மதிப்பீட்டு தொகைக்கு 1.33% அதிகம் |

கோப்பு எண்.995/2018/ இ1

அலுவலகக் குறிப்பு:

மதிப்பீட்டு தொகையை விட 0.63% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.எம். முனியசாமி என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 554 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :15**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 9–வது வார்டு பகுதிகளில் பொதுமக்கள் கழிவுநீரை வெளியேற்ற அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்களுக்கு புதிதாக Man hole மற்றும் மூடிகள் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.1,15,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 22.01.2019–ந்தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கழிவுநீர் குழாய்களுக்கு Man hole மற்றும் மூடிகள் அமைக்கும் பணிக்கு 08.03.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி 2018–19 | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சி 9–வது வார்டு பகுதிகளில் கழிவுநீர் குழாய்களுக்கு புதிதாக Man hole மற்றும் மூடிகள் அமைக்கும் பணி செய்தல் | 1.15 | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர் கீழக்கரை | மதிப்பீட்டு தொகைக்கு 0.21% குறைவு |
| | | | திரு.சி. பழனி, ஒப்பந்ததாரர், கீழக்கரை. | மதிப்பீட்டு தொகைக்கு 1.11% அதிகம் |

(கோப்பு எண். 70 /2019/இ1)

அலுவலகக் குறிப்பு:

மதிப்பீட்டு தொகையை விட 0.21% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி. சிவக்குமார் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 556 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :16

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 20–வது வார்டு வடக்கு தெரு டிராக்டர் கொட்டகை பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகாலை உயர்த்திக் கட்டி சிமெண்ட் சிலாப் அமைத்தல் மற்றும் புதிதாக 8'' பி.வி.சி. கழிவுநீர் குழாய்கள் அமைத்து வாழைக்கொல்லை வாறுகாலில் இணைக்கும் பணி செய்வதற்கு மதிப்பீடு ரூ.3,75,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 18.02.2019–ந்தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மழைநீர் வடிகாலை உயர்த்திக் கட்டி சிமெண்ட் சிலாப் அமைத்தல் மற்றும் புதிதாக 8'' பி.வி.சி. கழிவுநீர் குழாய்கள் அமைத்து வாழைக்கொல்லை வாறுகாலில் இணைக்கும் பணிக்கு 08.03.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 94/2019/இ1)

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி 2018–19 | | | | |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட 20–வது வார்டு வடக்கு தெரு டிராக்டர் கொட்டகை பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகாலை உயர்த்திக் கட்டி சிமெண்ட் சிலாப் அமைத்தல் மற்றும் புதிதாக 8'' பி.வி.சி. கழிவுநீர் குழாய்கள் அமைத்து வாழைக்கொல்லை வாறுகாலில் இணைக்கும் பணி | 3.75 | திரு.ஆர். உத்தண்டி ஒப்பந்ததாரர் இராமநாதபுரம் | ரூ. 3,47,117/– 0.30% மதிப்பீட்டு தொகையைவிட குறைவு |
| | | | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர் கீழக்கரை | ரூ.3,50,297/– 0.62% மதிப்பீட்டு தொகையைவிட அதிகம் |

அலுவலகக் குறிப்பு.

மதிப்பீட்டு தொகையை விட 0.30% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர். உத்தண்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 557அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :17

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21–வது வார்டு கொந்தகருணை அப்பா தர்ஹா மணல்மேடு வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்டத் தொட்டிக்கு உள்ளூர் குடிநீர் ஆதாரமாக விளங்கும் சேதுக்கரை மற்றும் மாலங்குண்டு குடிநீர் ஏற்றும் நிலையங்களிலிருந்து அமைக்கப்பட்டுள்ள 180mm விட்டமுள்ள குடிநீர் குழாய்களில் புதிதாக 4'' அளவு மானி (Magnetic Flow Meter) பொருத்தும் பணிகள் செய்து கொடுப்பதற்கு மதிப்பீடு ரூ.2,50,000/–யை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 18.02.2019–ம் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் உள்ளூர் குடிநீர் ஏற்றும் நிலையங்களிலிருந்து வரும் குடிநீர் குழாய்களில் புதிதாக 4'' அளவு மானி பொருத்தும் பணி செய்வதற்கு 08.03.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற

**கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்.**

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2019–20** | | |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட 21–வது வார்டு கொந்தகருணை அப்பா தர்ஹா மணல்மேடு வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்டத் தொட்டிக்கு உள்ளூர் குடிநீர் ஆதாரமாக விளங்கும் சேதுக்கரை மற்றும் மாலங்குண்டு குடிநீர் ஏற்றும் நிலையங்களிலிருந்து அமைக்கப்பட்டுள்ள 180mm விட்டமுள்ள குடிநீர் குழாய்களில் புதிதாக 4'' அளவு மானி (Magnetic Flow Meter) பொருத்தும் பணி செய்தல் | 2.50 | ஸ்ரீசாய் இன்டஸ்ட்ரி, 382T, திருமுல்லைவாயல், சென்னை –62 | மதிப்பீட்டு தொகைக்கு 0.35 % குறைவு |
| | | | லெட்சுமி என்டர்பிரைசஸ் 20/23A சாந்தி பிளாட்ஸ், திருவான்மியூர், சென்னை – 629603 | மதிப்பீட்டு தொகைக்கு 1.25% அதிகம் |

**(கோப்பு எண்.120/2019/இ1)**

**அலுவலகக் குறிப்பு.**

**மதிப்பீட்டு தொகையை விட 0.35% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீசாய் இன்டஸ்ட்ரி, சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.**

**தீர்மானம் எண். 558அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :18**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 மீனவர் குப்பம் 21 குச்சில் பகுதிகளில் உள்ள நடைபாதைகளில் அச்சுக்கல் சாலை (Paver Block Road) அமைக்கும் பணி செய்வதற்குரிய மதிப்பீடு ரூ.5,50,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 22.01.2019–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 08.03.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | வருவாய் நிதி 2018–19 | | |
| 1. | வார்டு எண்.3 மீனவர் குப்பம் 21 குச்சில் பகுதிகளில் உள்ள நடைபாதைகளில் அச்சுக்கல் | 5.50 | திரு.சி. பழனி, ஒப்பந்ததாரர், முனீஸ்வரம், கீழக்கரை. | மதிப்பீட்டு தொகைக்கு 0.12 % குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | சாலை (Paver Block Road) அமைக்கும் பணி | | திரு.பி.எம். கஜேந்திரன், ஒப்பந்ததாரர், கீழக்கரை. | மதிப்பீட்டு தொகைக்கு 0.41% அதிகம் |

(கோப்பு எண். 38 /2019/இ1)

அலுவலகக் குறிப்பு.

மதிப்பீட்டு தொகையை விட 0.12% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.சி. பழனி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 559 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :20**

**கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 2–வது வார்டு முத்துச்சாமிபுரம், அண்ணாநகர் பகுதிகளில் மழைநீர் வடிகாலை சீரமைத்து, மேல் மூடி போடும் பணி செய்வதற்கு மதிப்பீடு ரூ.5,60,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 18.02.2019–ந்தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மழைநீர் வடிகாலை சீரமைத்து, மேல் மூடி போடும் பணிக்கு 08.03.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

**(ந.க.எண். 119/2019/இ1)**

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி 2018–19 | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 முத்துச்சாமிபுரம், அண்ணாநகர் பகுதியில் மழைநீர் வடிகாலை சீரமைத்து, மேல் மூடி போடும் பணி | 560000 | திரு.பி.எம். கஜேந்திரன் ஒப்பந்ததாரர் கீழக்கரை | ரூ. 5,26,992/– 0.38% மதிப்பீட்டு தொகையைவிட குறைவு |
| | | | திரு.சி. பழனி ஒப்பந்ததாரர் கீழக்கரை | ரூ.5,31,854/– 0.53% மதிப்பீட்டு தொகையைவிட அதிகம் |

அலுவலகக் குறிப்பு.

மதிப்பீட்டு தொகையை விட 0.38% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு..பி.எம். கஜேந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 561 அனுமதிக்கப்பட்டது.**

பொருள் :21

கீழக்கரை நகராட்சி அலுவலக ஆணையாளர் அறையில் புதிதாக கழிவறை கட்டும் பணி செய்வதற்கு மதிப்பீடு ரூ.1,10,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 18.02.2019–ந்தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் புதிதாக கழிவறை கட்டும் பணிக்கு 08.03.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி 2018–19 | | | | |
| 1. | இந்நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் அறையில் புதிதாக ஒரு கழிவறை (Toilet) கட்டும் பணி | 1.10 | திரு.எம். முருகன் ஒப்பந்ததாரர் திருநெல்வேலி | மதிப்பீட்டு தொகைக்கு 0.39% குறைவு |
| | | | திரு.ஆர். உத்தண்டி ஒப்பந்ததாரர் இராமநாதபுரம் | மதிப்பீட்டு தொகைக்கு 0.42% அதிகம் |

(கோப்பு எண். 64/2019/இ1)

அலுவலகக் குறிப்பு:

மதிப்பீட்டு தொகையை விட 0.39% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எம். முருகன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

தீர்மானம் எண். 562அனுமதிக்கப்பட்டது.

பொருள் :22

இந்நகராட்சிப் பகுதியில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரில் 2 PPM அளவுக்கு குளோரின் இருக்கும் பொருட்டு இந்நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் கொந்தகருணை அப்பா தர்ஹா மணல் மேடு மேல்நிலை தொட்டிகள் (OHT)அமைந்துள்ள வளாகத்தில் திரவ நிலையில் குளோரின் செலுத்தும் திட்டம் (Liquid Chlorination System) செயல்படுத்தும் பணி செய்வதற்கு மதிப்பீடு ரூ. 6,50,000/–யை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 18.02.2019–ந்தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் குளோரின் திரவம் ஒரு வருடத்திற்கு 22600 லிட்டர் விநியோகம் செய்யும் பணிக்கு 08.03.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்க்காணும் நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 112/2019/இ1)

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2019–20 | | | | |
| 1. | இந்நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் கொந்தகருணை அப்பா தர்ஹா மணல் மேடு மேல்நிலை தொட்டிகள் (OHT)அமைந்துள்ள வளாகத்தில் குளோரின் திரவம் கலந்து குடிநீர் விநியோகம் செய்யும் குளோரினேஷன் ஆலை (Liquid Chlorination Plant) செயல்படுத்தும் பொருட்டு குளோரின் திரவம் கலந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு தேவையான குளோரின் திரவம் ஒரு வருடத்திற்கு 22600 லிட்டர் விநியோகம் செய்யும் பணி, | 6.50 | ஸ்ரீ சாய் இன்டஸ்ட்ரிஸ், T–382, காட்டூர், திருமுல்லைவாயில், சென்னை. | ரூ .6,27,912/– 1.46% மதிப்பீட்டு தொகையைவிட குறைவு |
| | | | லெட்சுமி எண்டர்பிரைசஸ், 20/23ஏ, கதவு எண் டி , சாந்தி ஃபிளாட், திருவான்மியூர், சென்னை. | ரூ .6,51,888/– 2.31% மதிப்பீட்டு தொகையைவிட அதிகம் |

அலுவலகக் குறிப்பு.

மதிப்பீட்டு தொகையை விட 1.46% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ சாய் இன்டஸ்ட்ரிஸ், சென்னை, நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 563அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :23**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 3–வது வார்டு பழைய கஸ்டம்ஸ் ரோடு பகுதி மெயின் ரோடு முதல் கடற்கரை பகுதி வரை புதிதாக 8'' பி.வி.சி. கழிவுநீர் குழாய்கள் அமைத்து ஜங்ஷன் பாக்ஸ் மற்றும் மூடிகள் அமைக்கும் பணி செய்வதற்கு மதிப்பீடு ரூ.3,85,000/–க்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளும் பொருட்டு 18.02.2019–ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 08.03.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி 2018–19 | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சி வார்டு எண்.3 பழைய கஸ்டம்ஸ் ரோடு பகுதி மெயின் ரோடு முதல் கடற்கரை பகுதி வரை 8'' Pvc கழிவுநீர் குழாய்கள் | 3.85 | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர் கீழக்கரை. | ரூ.3,61,512/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 0.16% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைத்து ஜங்ஷன் பாக்ஸ் மற்றும் மூடிகள் அமைக்கும் பணி | | திரு.ஆர்.உத்தண்டி ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | ரூ.3,65,631/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 1.02% அதிகம் |

**(ந.க.எண். 51/2019/இ1)**

**அலுவலகக் குறிப்பு.**

**மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி. சிவக்குமார் கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.**

**தீர்மானம் எண். 564அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :24**

பொதுசுகாதாரம் – கீழக்கரை நகராட்சி பொதுசுகாதாரத்திற்கு பயன்படுத்தப்படும் கழிவுநீர் வாகனம் எண் TN65 Q 9563 வாகனத்தில் உள்ள **கியர்பாக்ஸ் உள்ள பெரல்கியர் வீல் மாற்றி பழுது பார்த்தல், PTO பம்ப் புதிதாக மாற்றுதல் , கம்ப்ரஸர் பிளேடு செட் புதிதாக மாற்றுதல், கியர்பாக்ஸ் ஆயில் மாற்றுதல், கம்ப்ரஸர் ஆயில் மாற்றுதல்,** போன்ற பழுதுகளை சரிசெய்வதற்கு ஆகும் செலவீனம் ரூ48,800/– ஆகும் என இவ்வலுவலக துப்புரவு அலுவலரால் குறிப்பு வழஙகப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொதுசுகாதார நலன் கருதி முன்பணமாக ரூ 25000/– வி.எம்.எஸ். மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு வழஙகி பழுது பார்க்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ 23800/–வழஙகுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. பொதுசுகாதாரப் பணி அவசியம் கருதி உத்தேச செலவீனம் ரூ.48,800/– க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார நலன் கருதி முன் பணம் ரூ 25000/– வழஙகியதை அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 565அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :25**

கீழக்கரை நகராட்சியின் 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவு திட்ட அறிக்கைகள் (Budget) கணினி மென்பொருளில் பதிவேற்றம் செய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள வரவு, செலவு திட்ட அறிக்கைகள் மற்றும் 2018–2019 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.271/2019/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

2019–2020 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட அறிக்கைகள் மற்றும் 2018–2019 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கைகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 566அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :26**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண். 15/செமதொ/2019, நாள்.28.01.2019ல் தெரிவித்துள்ளபடி, தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணை எண்.84, நாள்.25.06.2018ன்படி ஒருமுறை உபயோகப்படுத்தப்பட்டு தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கப்படுவதும், சேமித்து வைப்பதும், விநியோகிப்பதும், போக்குவரத்து செய்வதும், விற்பதும் 01.01.2019 முதல் தடை செய்யப்பட்டுள்ள அறிவிக்கை இந்நகராட்சி மூலம் தினத்தந்தி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு கட்டணம் ரூ.41,580/—க்கு பட்டியல் எண். MDU1819-0030442 நாள்.24.02.2019—ன் படியானது இந்நகராட்சிக்கு 04.03.2019—ம் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் ரூ.41,580/— மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

தினதந்தி நாளிதழ் விளம்பர கட்டணம் ரூ.41,580/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 567அனுமதிக்கப்பட்டது.**

ஒம்/— ஆ. தனலெட்சுமி,பி.காம்
தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)
கீழக்கரை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (பொ)
கீழக்கரை நகராட்சி.